

பாமாலை 362B - தெய்வன்புதான் மா இனிமை

1 தெய்வன்புதான் மா இனிமை
அதெற்கென்று என் உள்ளத்தை
கொடுத்திருக்கிறேன்
என் மீட்பர் அன்பின் அளவை
அறிவதே என் மகிமை
எப்போது அறிவேன்

2 பாதாளம் சாவைப் பார்க்கிலும்
அவரின் நேசம் பலமும்
ஆழமானதே
பூலோகத்தார் எல்லாருக்கும்
மாட்சிமையுள்ள வானோர்க்கும்
எட்டாததாயிற்றே

3 தெய்வன்பின் ஆழம் கர்த்தாவே
அளந்து பார்த்தவர் நீரே
அன்பின் பிரவாகத்தை
என் ஏழை நெஞ்சில் ஊற்றிடும்
இதே என் உள்ளம் வாஞ்சிக்கும்
தீராத வாஞ்சனை

4 உம் திருமுகம் பார்ப்பதும்
உம்மண்டை நித்தம் சேர்வதும்
என் முழு வாஞ்சையாம்
உம் திவ்ய சத்தம் கேட்பது
எனக்கு இன்பம் களிப்பு
என் மோட்ச பாக்யமாம்